# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2342/16 - 2023 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා - 2023.07.25

*2342/16 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 72548 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதும் அத்துடன் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட இலக்கம் 135, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்த, கொகுவள, நுகேகொடவில் அமைந்துள்ளதும் சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 2301/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதன் நிரல் I இலும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 விசேட சித்தி ஒன்றுடன் (SLQF) மட்டம் 6) பொருள் ஏற்பாட்டியல் மற்றும் வழங்கீட்டு சங்கிலி முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவ இளமாணி தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில், ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமையைப் போன்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமை, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தினை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கக் குறியீடுகள்* |
|---|---|
| பொருள் ஏற்பாட்டியல் மற்றும் வழங்கீட்டு சங்கிலி முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவ இளமாணி | பிபிஎம் சிறப்பு (பொருள் ஏற்பாட்டியல் மற்றும் வழங்கீட்டு சங்கிலி முகாமைத்துவம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 21.*

EOG *07-0231*